# பொதுத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
2022 - 2023

## மானியக் கோரிக்கை எண். 38

# திரு. மு.க. ஸ்டாலின்
மாண்புமிகு முதலமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2022

## பொருளடக்கம்


| வ. எண். | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | தமிழ் நாட்டிற்கு வருகை புரிந்த மிக முக்கிய விருந்தினர்கள், அயல்நாட்டுத் தூதுவர்கள் | 10 |
| 3. | தேசிய விழாக்கள், சிறப்பு நாள்கள், பொது விடுமுறை நாள்கள் அறிவிப்பு, விருதுகள் | 12 |
| 4. | அரசு விருந்தினர் இல்லங்கள் | 18 |
| 5. | அயல்நாட்டினர் | 28 |
| 6. | முதல்வரின் முகவரித் துறை | 32 |
| 7. | இராணுவம் | 42 |
| 8. | முன்னாள் படைவீரர் நலத்துறை | 45 |
| 9. | தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (டெக்ஸ்கோ) | 72 |
| 10. | மாநில மனித உரிமைகள் ஆணையம் | 76 |
| 11. | முடிவுரை | 79 |

# பொதுத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2022–2023

### 1. முன்னுரை

தலைமைச் செயலகத்தின் தலையாய அங்கமாகவும், மாநிலத்தின் பொது நிர்வாகத்தைக் கையாளும் துறையாக, சில நேரங்களில் மூளையாகவும், சில நேரங்களில் இதயமாகவும் செயல்பட்டு, செம்மையாகவும், சீராகவும் நிருவாகம் நடைபெற பொதுத் துறை உறுதுணையாக உள்ளது. பொது நிர்வாகத்தைக் கையாளும் இத்துறை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. அல்லும் பகலும், விடுமுறை நாள்களிலும் அயராது இயங்கி, நிருவாகத்தை நெறிபட செலுத்த இத்துறை அரும்பணி ஆற்றுகிறது.

உடலின் முக்கிய உறுப்புகள் உள்ளே அமைந்து கண்ணுக்குத் தெரியாமல் எவ்வாறு திறமையுடன் இயங்குகின்றதோ அதைப் போல ஒரு சிறந்த

ஆளுமையின் இலக்கணம் கண்ணுக்குத் தெரியாமல் திறமையுடன் இயங்குவது. பொதுத் துறையும் அப்படித்தான். விளம்பர வெளிச்சமின்றி, அமைதியாகச் செயல்பட்டு, தலைமைச் செயலகத்திலிருந்து ஆணைகளைக் கடைகோடிச் சிற்றூருக்கும் அனுப்பி, உள்ளூரின் சட்டம்–ஒழுங்கு முதல் அயலகத் தமிழர் நலன்வரை அனைத்தையும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது.

மாநிலத்தின் ஆணிவேராகவும் முக்கியமான பொறுப்புகளில் பணியாற்றுபவர்களும் இந்திய ஆட்சி பணி அலுவலர்கள், அடுத்த கட்டமாக, மாவட்ட வருவாய் அலுவலர்கள், இவர்களுடைய நிருவாக அமைப்பைக் கையாளுவதும், நெறிபடுத்துவதும் பொதுத் துறைதான்.

பொதுத் துறை என்கிற பெயர் இருப்பதாலேயே, மற்ற துறைகள் கையாள முன்வராத பணிகளையும் இத்துறையே முதுகில் சுமந்து ஆற்றுகிற முனைப்பை

மேற்கொள்கிறது. அதேநேரத்தில், அனைத்துத் துறைகளின் பணிகளை ஒருங்கிணைக்கும் இணைப்பு பாலமாக இருக்கிறது.

மிகவும் நுட்பமான பல பணிகளை இத்துறை திறம்பட கையாளுகிறது. மாண்புமிகு மாநில ஆளுநர் அவர்களின் பதவிப் பிரமாணம், அமைச்சரவை பதவி ஏற்கும் நிகழ்ச்சி, தலைமை நீதிபதி பதவி ஏற்கும் மரபு ஆகிய அனைத்தையும் நெறி வழுவாமல் கடைபிடிக்க வேண்டிய பணிகளைச் சிறிதும் பிசகாமல் நிர்வகிக்கும் பொறுப்பு இத்துறைக்கே இருக்கிறது.

தமிழ்நாட்டிற்கு வருகைபுரிகிற வெளி மாநிலத்தைச் சார்ந்த உயர் பெருமக்களையும், வெளிநாடுகளிலிருந்து வருகிற தூதர்களையும், வெளிநாட்டில் தலைமைப் பொறுப்பில் இருப்பவர்களையும் சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்று, அவர்கள் திரும்பும் வரை செவ்வனே கவனித்து, புன்னகையோடும், பூங்கொத்தோடும்

அனுப்பி வைக்கிற பெரும் பொறுப்பு இத்துறைக்கே இருக்கிறது.

ஒன்றிய அரசின் வெளியுறவுத் துறை அமைச்சகத்தோடும், அயல்நாட்டுத் தூதரகங்களோடும், மற்ற அமைச்சகங்களோடும் மரபு சார்ந்த பணிகளுக்காகத் தொடர்பு கொண்டு, தகவல்களைப் பெற்று நிர்வகிக்கும் நுண்ணியப் பொறுப்பும் இத்துறைக்கே உள்ளது.

மக்களாட்சியின் முக்கிய அம்சங்களான சட்டமன்றம், நிர்வாகம் ஆகியவற்றுடன் மூன்றாவது அம்சமாக விளங்கும் நீதித் துறையின் தேவைகளை நிறைவு செய்வதிலும், மாவட்ட நீதிபதிகள், உயர் நீதிமன்ற சட்ட அலுவலர்கள் ஆகியோரின் நியமனத்தைக் கையாளுவதிலும் இத்துறை முன்னணி வகிக்கிறது.

முக்கிய விருந்தினர்கள் வருகிறபோது தங்குவதற்கும், மாவட்டங்களிலிருந்து உயர்

அலுவலர்கள் வருகிறபோது ஓய்வு எடுத்துக்கொள்வதற்கும் விருந்தினர் இல்லங்கள் முக்கியமானவை. சென்னைச் சேப்பாக்கத்தில் இருக்கிற அரசு விருந்தினர் இல்லம், சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள அரசு ஓய்வு இல்லம், உதகமண்டலத்தில் இருக்கிற தமிழகம் விருந்தினர் இல்லம், தாய்த் திருநாட்டின் தலைநகராம் புதுடெல்லியில் இருக்கிற தமிழ்நாடு இல்லம் ஆகியவற்றை பராமரித்தும், புதுப்பித்தும், பழுதுபார்த்தும், ஒதுக்கீடுச் செய்தும் இத்துறை நிர்வகித்து வருகிறது.

**பொதுத் துறை மேற்கொள்ளும் இதர பணிகள் பின்வருமாறு:–**

**அயல்நாட்டினர்**

- அயல்நாட்டினர் சட்டம், 1946
- 'இ–சனட்' சேவைத் திட்டம்

**நலன் பேணுதல்**

- மாநிலத்தில் முகாம்களிலும், வெளிப்பகுதிகளிலும் தாய்மண்ணைத் தேடி, தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களின் நலன் பேணுதல்.

- அயலகத் தமிழர்கள் நலன்–அவர் தம் பங்களிப்பைச் செய்ய 'தாய்மண்' அலகு.
- முன்னாள் படைவீரர்கள் நலன், அவர்களது குடும்ப நலன், முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் [Tamil Nadu Ex–Servicemen's Corporation Limited (TEXCO)] நிர்வாகம்.
- சுதந்திரப் போராட்ட வீரர்கள், முன்னாள் இந்தியத் தேசிய இராணுவ வீரர்களுக்காக (Ex–INA) ஒய்வூதியம் வழங்குதல், நலப் பணிகளைச் செயல்படுத்துதல்.

**மனித உரிமைகள்**

- மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1993–ஐ செயல்படுத்துதல், மாநில மனித உரிமைகள் ஆணையம், தேசிய மனித உரிமைகள் ஆணையம் தொடர்பான பணிகள்.

**சட்டம்–ஒழுங்கு**

- சட்டம் ஒழுங்கினைப் பராமரித்தல், அது தொடர்பாக விசாரணை ஆணையங்களை அமைத்தல்.
- தேசியப் பாதுகாப்புச் சட்டம் (National Security Act, (NSA)), 1980 அந்நியச் செலாவணி பாதுகாப்பு, கள்ளக்கடத்தல் நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம், 1974–ஐ (Conservation of Foreign Exchange and Prevention of Smuggling Act, (COFEPOSA)) நடைமுறைப்படுத்துதல்.

**இராணுவம்**

- தேசிய ஒருமைப்பாட்டுக் குழு, பன்மாநிலக் குழு, தென்மண்டலக் குழு உட்பட ஒன்றிய, மாநில அரசுகளுக்கு இடையேயான பொதுவான விவரங்கள் குறித்துக் கவனித்தல்.
- இந்தியத் தரைப்படை, கப்பற்படை, விமானப்படை, கடலோரக் காவல்படை ஆகிய இராணுவத் துறைகளுடன் ஒத்துழைப்பு நல்குதல்.

**குறைதீர்த்தல்**

- முதல்வரின் முகவரித்துறையில் பெறப்படும் மனுக்கள்மீது உரிய ஆய்வு செய்து தீர்வு காணுதல்.

**மற்றவை**

- தேசிய விழாக்களான சுதந்திரத் திருநாள், குடியரசுத் தினக் கொண்டாட்டங்களுக்கு ஏற்பாடுச் செய்தல்.

- மாநில அரசின் விருதுகளைத் தகுதியுள்ள நபர்களுக்கு வழங்குவதற்கான பணிகளை மேற்கொள்ளுதல்.
- ஒன்றிய அரசால் வழங்கப்படும் விருதுகளுக்கான தகுதியுள்ள நபர்களைத் தேர்வு செய்து ஒன்றிய அரசுக்குப் பரிந்துரை செய்தல்.
- அமைச்சரவைக் கூட்டங்களுக்கு அவ்வப்போது ஏற்பாடுச் செய்தல்.
- பொது விடுமுறையையும், உள்ளூர் விடுமுறையையும் அறிவித்தல்.
- தலைமைச் செயலகக் கட்டடங்களைப் பராமரித்தல், நிருவகித்தல்.
- அரசு விமான போக்குவரத்துப் பிரிவு சம்பந்தமான பணிகளை நிருவகித்தல், கவனித்தல்.

## 2. தமிழ்நாட்டிற்கு வருகைபுரிந்த மிக முக்கிய விருந்தினர்கள், அயல்நாட்டுத் தூதுவர்கள்

மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர், மாண்புமிகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர், மாண்புமிகு இந்தியப் பிரதமர், வெளிநாட்டு அரசின் தலைமைப் பொறுப்பு வகிக்கும் பிரமுகர்கள், வெளிநாட்டு அமைச்சர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள் / உயர் ஆணையர்கள் ஆகியோர் தமிழ் நாட்டுக்கு வருகை புரியும் போது மரபு, பாதுகாப்பு ஏற்பாடுகள் பொது (மரபு) துறையால் செய்யப்படுகின்றது. மேலும் மாண்புமிகு ஆளுநர், மாண்புமிகு முதலமைச்சர், தலைமைச் செயலாளர் ஆகியோருடன் வெளிநாட்டு அமைச்சர்கள் / தூதுவர்கள் / முக்கியப் பிரமுகர்களுக்கு சந்திப்பு ஏற்பாடுகள் ஒன்றிய அரசின் வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் இசைவுடன் செய்யப்படுகின்றது.

2. மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் 02.08.2021 முதல் 06.08.2021 வரை

தமிழகத்திற்கு வருகை புரிந்தார். அவ்வருகையின் போது தமிழக சட்ட மேலவை நூற்றாண்டு விழாவில் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் திருவுருவப்படத்தைச் சென்னை தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ் கோட்டையின் தமிழக சட்டமன்றப் பேரவையில் 02.08.2021 அன்று திறந்து வைத்தார்.

3. கடந்த மே மாதம் 2021 முதல் மார்ச் 2022 வரை தமிழ் நாட்டிற்கு வருகை புரிந்த முக்கிய தகைசால் பெருமக்களின் விவரம் பின்வருமாறு:–

| மிக மிக முக்கிய நபர்களின் விவரம் | வருகையின் எண்ணிக்கை |
|---|---|
| மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் | 1 |
| மாண்புமிகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் | 7 |
| வெளிநாட்டுத் தூதுவர்கள் | 8 |
| வெளிநாட்டு அமைச்சர்கள் | 2 |
| வெளிநாட்டுத் துணைத் தூதுவர்கள் | 11 |
| மாண்புமிகு உச்ச நீதிமன்ற தலைமை நீதியரசர் | 1 |
| **மொத்தம்** | **30** |

## 3. தேசிய விழாக்கள், சிறப்பு நாள்கள், பொது விடுமுறை அறிவிப்பு, விருதுகள்

இந்தியத் தேசிய விழாக்களான சுதந்திரத் திருநாள், குடியரசுத் திருநாள் விழாக்களை, மாநில அளவில் நாட்டுப் பற்றுடன் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைப் பொது (பொது–I) துறை செய்கிறது. ஒவ்வொரு ஆண்டும், குடியரசு நாள் விழா அன்று, சென்னைக் கடற்கரையில் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைப்பதற்கான ஏற்பாடுகள், அலங்கார அணிவகுப்பு, பல்வேறு கலை நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளையும் இத்துறை செய்கிறது. மேலும், சுதந்திரத் திருநாள் விழாவின் போதும், சென்னைத் தலைமைச் செயலகத்தில் உள்ள கோட்டை கொத்தளத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றிவைக்கும் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளையும் இத்துறை மேற்கொள்கிறது.

அரசால் சிறப்பு நாளாக அறிவிக்கப்பட்டுள்ள தியாகிகள் தினம், சமூக நீதி நாள், சமத்துவ நாள் ஆகிய

நாள்களில் உறுதிமொழியேற்புச் செய்துவைக்கும் நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகள் இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சட்ட மன்ற விதி எண் 110ன் கீழ் அறிவித்தபடி சாதிய ஏற்றத் தாழ்வுகள், தீண்டாமைக் கொடுமைகளை, மத வேறுபாடுகளை உதறித் தள்ளி, பெண்களைச் சமநிலையில் மதிக்கும் கொள்கையை உருவாக்கிய தந்தை பெரியார் அவர்களின் பிறந்த தினமான செப்டம்பர் 17–ஆம் நாளினை சமூக நீதி நாளாக அரசு அறிவித்தது. இந்நாளினை ஆண்டுதோறும் தலைமைச் செயலகம் தொடங்கி, அனைத்து அரசு அலுவலகங்களிலும் **"சமூக நீதி நாள்"** உறுதி மொழியேற்பு எடுத்துக்கொள்வதற்காக அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற விதி எண் 110ன் கீழ், 13.04.2022 அன்று அறிவித்ததைத் தொடர்ந்து அண்ணல் அம்பேத்கரின்

பிறந்த நாளான ஏப்ரல் 14–ஆம் நாளினை "**சமத்துவ நாள்**" எனக் கொண்டாட அரசாணை வெளியிடப்பட்டது. சாதி வேறுபாடுகளுக்கு எதிராக உறுதிமொழி எடுக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிற்கும், தமிழ் இன வளர்ச்சிக்கும் மாபெரும் பங்காற்றியவர்க்கு "**தகைசால் தமிழர் விருது**" 2021–ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருது முதன் முதலாக திரு.என்.சங்கரையா அவர்களுக்கு, அவர் தமிழ் நாட்டிற்கும் தமிழ் சமுதாய வளர்ச்சிக்கும் ஆற்றிய பணிகளுக்காக வழங்கப்பட்டது.

மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை அவர்கள் எழுதிய **தமிழ்த்தாய் வாழ்த்துப்** பாடலை **மாநிலப் பாடலாக** 17.12.2021 அன்று தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாணையில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை கல்வி நிறுவனங்களிலும், அரசு விழாக்கள், பொது நிகழ்ச்சிகளிலும் தவறாமல் பாட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாற்றுத்

திறனாளிகள், கர்ப்பிணிப் பெண்கள் தவிர அனைவரும் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் இசைக்கப்படும் போது எழுந்து நிற்க வேண்டும் எனவும் அவ்வாணையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

வீர தீர செயலுக்கான அண்ணா பதக்கம், துணிவு, சாகசச் செயலுக்கான கல்பனா சாவ்லா விருது ஆகிய விருதுகளுக்குத் தகுதியுடைய நபர்களைத் தெரிவு செய்யும் பணியிலும் பொதுத்துறை முக்கியப் பங்காற்றுகிறது. இவ்விருதுகளுக்கான விண்ணப்பங்கள் awards.tn.gov.in என்ற இணையத் தளம் வாயிலாகப் பெறப்பட்டு அரசு செயலாளர்கள் அடங்கிய தேர்வுக்குழுவின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

மேலும், ஒன்றிய அரசால் வழங்கப்படும் விருதுகளான பத்ம விருதுகள், வீரதீர செயலுக்காக வழங்கப்படும் விருதுகள், சர்தார் படேல் தேசிய ஒற்றுமை விருது, மத நல்லிணக்கத்திற்கான கபீர் புரஸ்கார் விருது, காந்தியடிகள் அமைதிப் பரிசு போன்ற

விருதுகளுக்கான பரிந்துரைகள் இத்துறையின் மூலம் ஒன்றிய அரசுக்கு அனுப்பப்படுகின்றன.

மாநிலத்தின் பொது விடுமுறை தொடர்பான அறிவிப்புகள் செலாவணி முறிச்சட்டம் 1881–ன் கீழ் இத்துறையால் அறிவிக்கப்படுகிறது. 1957–ஆம் ஆண்டில் ஒன்றிய அரசால், மாநில அரசுகள் தத்தம் மாநிலங்களுக்குச் செலாவணி முறிச்சட்டம், 1881–ன் கீழ் பொது விடுமுறை நாள்கள் அறிவிக்க (வங்கிகள் உட்பட) அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

செலாவணி முறிச்சட்டம் 1881–ன் கீழ், மாநில அரசு அலுவலகங்கள், கல்வி நிலையங்கள், மாநிலத்திலுள்ள தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வங்கிகளுக்கு அரசு பொது விடுமுறை நாள்கள் அறிவிப்பதற்குக் கீழ்காணும் அதிகார அமைப்புகளிடமிருந்து அறிக்கை கோரப்பட்டு அதன் அடிப்படையில் பொது விடுமுறை நாள்கள் பட்டியல்

முடிவு செய்து ஒவ்வொரு ஆண்டும் ஆணை வெளியிடப்படுகிறது:–

ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை; தமிழக அரசின் தலைமைக் காஜி; தென்னிந்தியக் கிறிஸ்துவ திருச்சபையின் மதராஸ் மறை மாவட்டப் பேராயர்; மயிலாப்பூரில் உள்ள மதராஸ் மறை மாவட்டப் பேராயர்; பாரத ரிசர்வ் வங்கி, சென்னை; வான் கோளியல் மையம், கொல்கத்தா; இந்திய வானிலை ஆய்வுத் துறை, கொல்கத்தா; இந்திய வானியற்வியல் நிறுவனம், பெங்களூரு; தென்னிந்திய வர்த்தக மற்றும் தொழில் சபை, சென்னை; பகவான் மகாவீர் அகிம்சா பிரச்சார சங்கம், சென்னை.

## 4. அரசு விருந்தினர் இல்லங்கள்

பொதுத்துறையின் கட்டுப்பாட்டில் 1) அரசு விருந்தினர் இல்லம், சேப்பாக்கம், சென்னை; 2) புதிய விருந்தினர் இல்லம், ஓமந்தூரார் தோட்டம், சென்னை; 3) அரசு ஓய்வு இல்லம், சிந்தாதிரிப்பேட்டை, சென்னை; 4) தமிழகம் விருந்தினர் இல்லம், உதகமண்டலம்; 5) வைகை தமிழ்நாடு இல்லம், புதுடெல்லி; 6) பொதிகை தமிழ்நாடு இல்லம், புதுடெல்லி ஆகிய 6 அரசு விருந்தினர் இல்லங்கள் செயல்படுகின்றன.

**அரசு விருந்தினர்:** தமிழகத்திற்கு வருகை தரும் மிக மிக முக்கிய, மிக முக்கியப் பிரமுகர்களான மாண்புமிகு குடியரசுத் தலைவர், மாண்புமிகு குடியரசுத் துணைத் தலைவர், மாண்புமிகு பாரதப் பிரதமர், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி, பிற மாநில ஆளுநர்கள், முன்னாள் குடியரசுத் தலைவர், முன்னாள் குடியரசுத் துணைத் தலைவர், முன்னாள் பாரதப் பிரதமர், மக்களவையின் சபாநாயகர், துணை சபாநாயகர், ஒன்றிய அமைச்சர்கள், மக்களவை,

மாநிலங்களவையின் எதிர் கட்சித்தலைவர், பிற மாநில முதலமைச்சர்கள், அமைச்சர்கள், நிதி ஆயோக் துணைத்தலைவர், பிற மாநில சபாநாயகர்கள், துணைச் சபாநாயகர்கள், இந்தியத் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர், ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்ட ஆணையத்தின் தலைவர்கள் / உறுப்பினர்கள், அயல் நாட்டுப் பிரமுகர்கள், மாண்புமிகு உச்ச நீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகள், ஒன்றிய அரசின் செயலாளர்கள் ஆகிய அனைவரும் அரசு விருந்தினர்களாகக் கருதப்பட்டு அவர்களுக்கு வரவேற்பு, உணவு, மருத்துவச் சேவை, தொலைபேசி கட்டணம், போக்குவரத்து, பாதுகாப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. பாதுகாப்பு வசதிகள் ஒன்றிய அரசின் உள்துறை நிர்ணயித்துள்ள பட்டியலின்படி கொடுக்கப்படுகின்றன.

**தொகை தரு விருந்தினர்:** மரபு கையேட்டின்படி, அரசு விருந்தினர் பிரிவின் கீழ் வராதவர்கள் தொகை தரு விருந்தினர்களாகக் கருதப்படுவர். கட்டணம் செலுத்துதல் அடிப்படையில், தங்கும் வசதி, போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன.

### 4.1. அரசு விருந்தினர் இல்லம், சேப்பாக்கம், சென்னை

அரசு விருந்தினர் இல்லம் 1970 ஆம் ஆண்டு சேப்பாக்கம், சென்னையில் கட்டப்பட்டது. தற்போது அரசு விருந்தினர் இல்லத்தில் 33 அறைகள் (6 தொகுப்பு அறைகள், 11 சொகுசு அறைகள், 16 நிலையான அறைகள்) உள்ளன.

### 4.2. புதிய விருந்தினர் இல்லம், ஓமந்தூரார் தோட்டம், சென்னை

புதிய விருந்தினர் இல்லத்தில் 40 சொகுசு அறைகள், 20 நபர் அமரக்கூடிய சிறியக் கூட்ட அரங்கம் 4, 40 நபர் அமரக்கூடிய பெரியக் கூட்ட

அரங்கம் 4, உணவு அருந்தும் அறை 2, நவீன உடற்பயிற்சிக் கூடம் அமைந்துள்ளன.

அரசு விருந்தினர் இல்லம், சேப்பாக்கம், புதிய விருந்தினர் இல்லம், ஓமந்தூரார் தோட்டம் ஆகிய விருந்தினர் இல்லங்களில் அரசு விருந்தினர், தொகை தரு விருந்தினர் தங்குவதற்கு www.sgh.tn.gov.in என்னும் இணையத்தின் வலை தளப்பக்கத்தின் வாயிலாக முன் பதிவினைச் செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி இவ்விரு இல்லங்களிலும் 89 அலுவலர்கள் / பணியாளர்கள் வரவேற்பு அலுவலர் (இணை மாநில மரபு அலுவலர்) கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரிகின்றனர்.

## 4.3. அரசு ஓய்வு இல்லம், சிந்தாதிரிப்பேட்டை, சென்னை

சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள அரசு ஓய்வு இல்லம், சென்னை 1981–ஆம் ஆண்டுக் கட்டப்பட்டது. தற்பொழுது மறுகட்டுமான பணிகள் நடைபெறுகின்றன.

**07.05.2021 முதல் 31.03.2022 வரை அரசு விருந்தினர் இல்லங்களில் தங்குமிட வசதி வழங்கப்பட்ட விவரம்:–**

| வ. எண். | விருந்தினர் | அரசு விருந்தினர் இல்லம், சேப்பாக்கம், சென்னை | புதிய அரசு விருந்தினர் இல்லம், ஓமந்தூரார் தோட்டம், சென்னை |
|---|---|---|---|
| 1. | அரசு விருந்தினர் | 26 | 45 |
| 2. | தொகை தரு விருந்தினர் | 414 | 695 |
| | **மொத்தம்** | **440** | **740** |

## 4.4. தமிழகம் விருந்தினர் இல்லம், உதகமண்டலம்

அரண்மோர் அரண்மனை என்ற அறியப்பட்ட உதகமண்டலம், தமிழக விருந்தினர் மாளிகை ஜோத்பூர் மகாராஜாவால் 1925–ஆம் ஆண்டு கட்டப்பட்டது. ஜோத்பூர் மகாராஜாவிடமிருந்து தமிழ்நாடு அரசு இவ்வரண்மனையை 28.12.1958 அன்று விலைக்கு வாங்கி அரசுடைமையாக்கியது. இவ்வரண்மனையில் 4 முக்கிய விருந்தினர் அறைகள், 35 அறைகள், 1 விடுதி அறை, 200 நபர்கள் அமரக்கூடிய அழகிய

அவைக்கூடம், 30 பேர் அமரக் கூடிய சிறிய அவைக் கூடமும் உள்ளன. இவ்வரண்மனை 36 ஏக்கர் நிலப்பரப்பில் பசுமையான புல்வெளிகள், தோட்டங்களால் சூழப்பட்டுத் தோட்டக் கலைத்துறையால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

உதகமண்டலம், தமிழக விருந்தினர் மாளிகையில் மிகமுக்கிய விருந்தினர்கள், அமைச்சர்கள், நீதித்துறை உயர் அதிகாரிகள், அரசு அதிகாரிகள், அரசின் கீழ் இயங்கும் தன்னாட்சி அமைப்பின் கீழ் பணியாற்றுபவர்கள் அரசு பணி நிமித்தமாக தங்குவதற்கு ஏதுவாக வசதிகள் செய்துதரப்படுகிறது. இவ்விருந்தினர் மாளிகை வரவேற்பு அலுவலர் (வட்டாட்சியர் நிலையில்), 13 ஊழியர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இவ்விருந்தினர் மாளிகையில் நவீன உடற்பயிற்சிக் கூடம், பில்லியட்ஸ் மேசை, டென்னீஸ் மைதானம் போன்ற சிறப்பு வசதிகளும் உள்ளன. இவ்விருந்தினர் மாளிகையின் அறைகள் ஒதுக்கீடு https://tamizhagamguesthouse.tn.gov.in/

என்ற இணையதளத்தின் வாயிலாக நடைமுறைப் படுத்தப்பட்டுவருகிறது.

**07.05.2021–லிருந்து 31.03.2022 வரை உதகமண்டலம், தமிழக விருந்தினர் மாளிகையில் தங்கிச் சென்ற விருந்தினர்களின் விபரம் கீழ்வருமாறு :–**

| வரிசை எண் | விருந்தினர்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | அரசு விருந்தினர்கள் | 1 |
| 2. | பிற விருந்தினர்கள் | 939 |
| | **மொத்தம்** | **940** |

### 4.5. தமிழ்நாடு இல்லம், புதுடெல்லி

புது டெல்லியில் 2 தமிழ்நாடு இல்லங்கள் (பொதிகை தமிழ்நாடு இல்லம், வைகை தமிழ்நாடு இல்லம்) தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகிறது. தமிழ்நாடு இல்லம் கூடுதல் தலைமைச் செயலாளர் / முதன்மை உள்ளுறை ஆணையர் மற்றும் உள்ளுறை ஆணையர் ஆகியோரின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. தமிழ்நாடு இல்லம், வரவேற்பு, சமையல், பராமரிப்பு, பொறியியல், தொடர்பு, நிர்வாகம்,

கணக்கு போன்ற பல்வேறு பிரிவுகளால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இவ்விருந்தினர் மாளிகையில் அறைகள் ஒதுக்கீடு https://tnhouse.tn.gov.in/ என்ற இணையதளத்தின் வாயிலாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**4.5.1. பொதிகை தமிழ்நாடு இல்லம்**

பொதிகை தமிழ்நாடு இல்லம், புதுடெல்லியிலுள்ள சாணக்யபுரி திக்கேந்தர்ஜித் மார்க், எண் 9–ல் 1.966 ஏக்கர் பரப்பளவில் 16.09.2004 முதல் பயன்பாட்டில் உள்ளது. பொதிகை தமிழ்நாடு இல்லத்தில் 25 சொகுசு அறைகள், 45 அறைகளும் உள்ளன. இவ்வில்லத்தில் சமையல், இல்லக்காப்பகம், பாதுகாப்பு, குளிர்சாதன பராமரிப்பு, குழாய்ப்பணிகள் பராமரிப்பு, தீயணைப்பு, செடிகள் பராமரிப்புப் போன்ற அனைத்தும் தனியாரின் ஒப்பந்தத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. நவீன ஒலி, ஒளி கருவிகளுடன் 90 பார்வையாளர்கள் அமரும் வசதி கொண்ட அரங்கம் உள்ளது. பொதிகை தமிழ்நாடு இல்லத்திலுள்ள

மருத்துவ உதவி மையம் விருந்தினர்களுக்கும், அலுவலர்களுக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் குறைந்தபட்ச மருத்துவ உதவி வழங்கி வருகிறது. பொது மருத்துவர், திங்கள், புதன், வெள்ளிக் கிழமைகளில் மாலை 4.30 முதல் 6.00 மணி வரை பொதிகை–தமிழ்நாடு இல்லத்தில் மருத்துவ ஆலோசனை வழங்குகிறார். உள் அரங்கு உடல்நலம் மேம்பாட்டு மையமும் உள்ளது.

### 4.5.2. வைகை தமிழ்நாடு இல்லம்

வைகை தமிழ்நாடு இல்லம், புதுடெல்லியிலுள்ள சாணக்யபுரி கௌடில்யமார்க் எண் 6–ல் 1.757 ஏக்கர் நிலத்தில் 1962–ஆம் ஆண்டு கட்டப்பட்டது, அதன் தொடர்ச்சியாக, 1976–ஆம் ஆண்டு அதே வளாகத்தில் மூன்று அடுக்குமாடிகள் கட்டப்பட்டுப் பயன்பாட்டில் உள்ளது. வைகை தமிழ்நாடு இல்லத்தில் 7 சொகுசு அறைகளும், 40 அறைகளும் உள்ளன. இவ்வில்லத்தில் முக்கியப் பணிகள் அனைத்தும் அதாவது வரவேற்பு, உணவகம், இல்லக்காப்பகம்,

மின்சாரம், குழாய்ப் பணிகள், குளிர்சாதனம் ஆகியவை தமிழ்நாடு இல்லத்தில் பணிபுரியும் அரசு ஊழியர்களால் செயல்படுத்தப்படுகிறது.

**இரண்டு தமிழ்நாடு இல்லத்திலும் பொதுவாக வழங்கப்படும் சேவைகள்:–**

1. **வணிக மையம்:–** வைகை, பொதிகை தமிழ்நாடு இல்லத்தின் வணிக மையத்தில் செயலாக்க உதவிகளை உரிய வசதிகளுடன் கட்டண முறையில் விருந்தினர்களுக்குச் செய்து தரப்படுகிறது.
2. அனைத்து விருந்தினர்கள் அறைகளிலும் கம்பியில்லாத இணையத் தொடர்பு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.
3. உள், வெளியரங்கு உடல்நலம் மேம்பாட்டு மையம் இரண்டு தமிழ்நாடு இல்லங்களிலும் பயன்பாட்டில் உள்ளது. மேலும், குழந்தைகள், விருந்தினர்களுக்கான பொழுது போக்கு மையமும் வைகை தமிழ்நாடு இல்லத்தில் உள்ளது.

## 5.அயல்நாட்டினர்

### 5.1. அயல்நாட்டினர் சட்டம், 1946

மாநில அரசுகளுக்கு ஒன்றிய அரசால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, சட்ட விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபடும் அயல்நாட்டினர், நுழைவிசை (visa) விதிகளை மீறும் அயல்நாட்டினரை, நாட்டிற்குத் திருப்பி அனுப்பும் வரை அவர்களது இருப்பினை உறுதி செய்யும் பொருட்டு, அயல்நாட்டினர் சட்டம், 1946–ன் கீழான பிரிவு 3(2)(e)–ன்படி, அவர்களது நடமாட்டத்தை கட்டுப்படுத்தி அவர்களை ஓரிடத்தில் தங்க வைத்துத் திருப்பி அனுப்புவதற்கான நடவடிக்கைகளை இத்துறை மேற்கொள்கிறது.

மேலும், அயல்நாட்டவருக்கு எதிரான நீதிமன்ற நடவடிக்கைகள்/தண்டனை முடிந்த பின்னர், அவருக்கு எதிராக வேறு எந்தவித வழக்குகளோ, பாதகமான குறிப்புகளோ நிலுவையில் இல்லை என்ற அறிக்கை காவல்துறை தலைவர், நுண்ணறிவு

(உள்நாட்டுப் பாதுகாப்பு) அவர்களிடமிருந்து பெறப்பட்டவுடன் மாநில அரசுகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, அயல்நாட்டினர் சட்டம், 1946–ன் கீழான, பிரிவு 3(2)(c)–ன்படி, அயல்நாட்டவரை திருப்பி அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

காவல்துறைத் தலைவர், நுண்ணறிவு (உள்நாட்டுப் பாதுகாப்பு), சென்னை அவர்களிடமிருந்து கருத்துரு வரப்பெற்ற பின்னர் மேற்படி அயல்நாட்டினர் சட்டம், 1946–ன் கீழான பிரிவுகளின்படி ஆணை பிறப்பிக்கப்படும்.

### 5.2. "இ-சனட்" திட்டம்

மாநில அளவில், பொதுத்துறையானது வெளிநாடுகளில் உயர்கல்வி பயில்வதற்கு/ பணிபுரிவதற்குத் தேர்வாகியுள்ள இந்தியர்களின் ஆவணங்களுக்கு சான்றளிப்பு வழங்குகிறது. சான்றிதழ்களின் உண்மைத் தன்மையை உரிய ஆவணம் வழங்கும் அதிகார அமைப்பினால் சரிபார்க்கப்பட்டு

இத்துறையால் சான்றளிக்கப்படுகிறது. இச்சேவை இணையதளம் வாயிலாக வழங்குவதற்கு ஏதுவாக வெளியுறவுத்துறை அமைச்சகமானது, "இ–சனட்" http://esanad.nic.in என்ற இணையதள முகப்பினை தேசியத் தகவல் தொடர்பு மையம் (National Informatics Centre) வாயிலாகத் தொடங்கியுள்ளது. "இ–சனட்" என்பது தொடர்பற்ற (Contactless), தொகையற்ற (Cashless), காகிதமற்ற (Paperless) முறையில் முத்திரையிடும் சேவை வழங்குவதை நோக்கமாகக் கொண்டது.

இவ்விணையம் வழியாக விண்ணப்பிக்கப்படும் விண்ணப்பதாரரின் ஆவணங்கள்/ சான்றிதழ்கள், ஆவணம்/ சான்றிதழ் வழங்கும் அமைப்பினால் சரிபார்க்கப்பட்டு இத்துறையில் (தமிழ்நாடு அரசைப் பொறுத்தவரை) சான்றொப்பமிட்டு வெளியுறவுத் துறை அமைச்சகத்துக்கு அனுப்பப்படுகிறது. இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தால் சான்றொப்பமிட்ட ஆவணங்களின் நகல்கள் விண்ணப்பதாரர்களுக்கு

விரைவு அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படுகிறது. தமிழகத்தில், மேற்கண்ட "இ-சனட்" சேவையானது 01.01.2009 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு இவ்விணையம் வழியாக 31.03.2022 வரை 22,206 சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டுள்ளன.

## 6. முதல்வரின் முகவரித் துறை

பொதுமக்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு இவ்வரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. பொதுமக்களின் குறைகளைத் திறம்பட கையாள்வதற்கு வலுவான வழிமுறைகள் வகுக்கப்பட்டு அதன் அடிப்படையில், மாநிலத்தில் குறைதீர்க்கும் பணிகளுக்காகச் செயல்படும் அமைப்புகளை ஒருங்கிணைத்துப் பிரத்யேக துறை ஒன்றினை உருவாக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். அதன்படி முதலமைச்சரின் தனிப்பிரிவு, ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீர்ப்பு மேலாண்மை அமைப்பு IIPGCMS (CM helpline portal), உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறை ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்டு ஒரே துறையாக மாற்றப்பட்டு "**முதல்வரின் முகவரித்துறை**" என்ற துறை 03.11.2021 அன்று உருவாக்கப்பட்டது.

இப்புதிய துறை உருவாக்கப்பட்டதன் நோக்கம், மக்கள் தங்கள் குறைகளைப் பல வழிகளில் பதிவு

செய்வதற்கான அணுகுமுறையைப் பெருக்குவதோடு, தமிழ்நாடு அரசின் குடிமக்கள் சாசனத்தின்படி தீர்வுக்கான காலக்கெடுவுடன் குறைகளைக் கையாள்வதற்கு உரிய செயல்பாட்டு நடைமுறைகளைப் பின்பற்றி மேம்பட்ட தரமான சேவைகளை வழங்குவதாகும்.

இந்த ஒருங்கிணைக்கப்பட்ட புதியத் துறையில் பொதுமக்கள் தங்கள் மனுக்களை தபால் மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் போன்ற இணையவழி மூலமாகவோ சமர்ப்பிக்கலாம் அல்லது இலவச அழைப்பு (Toll Free) 1100 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு மனுக்களைப் பதிவு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்பட்ட மனுக்கள் தகுதியின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களால் முறையாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, தகுந்த அலுவலகங்களின் வாயிலாக அனுமதி ஆணைகள் வழங்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது. மனுவை

சாதகமாக நிறைவேற்ற முடியாவிட்டால், அதற்கான காரணங்கள் மனுதாரருக்குத் தெரிவிக்கப்பட்டு வருகிறது. 07.5.2021 முதல் 31.03.2022 வரை பெறப்பட்ட மனுக்கள், எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரம்:–

| மொத்த மனுக்கள் | ஏற்பு | தள்ளுபடி | நிலுவை |
|---|---|---|---|
| 22,24,833 | 10,82,180 | 9,65,816 | 1,76,837 |

## 6.1. உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறையின் செயல்பாடுகள்:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமது தேர்தல் பரப்புரையின் போது பெறப்பட்ட மனுக்கள் மீது தாம் பதவியேற்ற நாளிலிருந்து 100 தினங்களுக்குள் உரிய தீர்வு அளிக்கப்படும் என்ற வாக்குறுதியை மெய்ப்பிக்கும் வகையில், 07.05.2021–ல் தாம் பொறுப்பேற்ற உடன் பொதுமக்களின் குறைகள் மீது விரைந்து தீர்வுகாணும் பொருட்டு "**உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறை**" என்ற தனித் துறையை உருவாக்க உத்தரவிட்டார்கள்.

முதலமைச்சரின் குறைதீர்ப்பு மேலாண்மை மையத்தில் (CM helpline portal) 4,57,645 மனுக்கள் மின்னணு முறையில் பதிவேற்றம் செய்யப்பட்டு, அவ்வாறு பதிவு செய்யப்பட்ட மனுக்கள் மாவட்டத்தில் உள்ள சம்பந்தப்பட்ட கள அலுவலர்களால் சரிபார்த்து செயலாக்கத்திற்கு உடனடியாக எடுத்துக் கொள்ளப்பட்டன.

இத்துறையின் செயல்பாடுகள் மாண்புமிகு முதலமைச்சர், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் ஆகியோரால் நேரடியாகக் கண்காணித்து ஆய்வு செய்யப்பட்டுப் பரிசீலிக்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் 100 நாள்களின் நிறைவில் சம்பந்தப்பட்ட துறைகளின் உரிய நடைமுறைகளைப் பின்பற்றி 2,29,216 மனுக்கள் சாதகமாகத் தீர்வு அளிக்கப்பட்டு, பின்வரும் நலத்திட்டங்கள் வழங்கப்பட்டன:

- வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை மூலமாக 32,283 நிலப்பட்டாக்கள், சமூக

பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 30,455 நபர்களுக்கு ஓய்வூதியம் ஆகியவையும் ;

- ஊரக வளர்ச்சித்துறை மூலமாக ரூ. 544.27 கோடி மதிப்பில் 9,444 தனிநபர் வீடு வழங்கும் திட்டம் உட்பட 19,664 உட்கட்டமைப்புத் திட்டங்கள் ஆகியவையும்;
- தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மூலமாக வேலைவாய்ப்புக் கோரும் சுமார் 73,000 மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு அவற்றில் தனியார் துறை வேலைவாய்ப்புக் கோருபவர்களுக்காக, வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு சுமார் 2254 நபர்கள் தனியார் துறையில் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர். சுமார் 12,000 நபர்கள் போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். சுமார் 3000 நபர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

பொதுவாக 2 ஆண்டுகள் நடைபெற வேண்டிய இப்பணியானது 3 மாதங்களில் நடத்தி முடிக்கப்பட்டு விட்டது. இத்துறையின் செயல்பாடுகளின்

எதிரொலியாகப் பொதுமக்கள் தங்களின் நாட்பட்ட கோரிக்கை மனுக்களை மாண்புமிகு முதலமைச்சரின் தனிப்பிரிவில் அதிக அளவில் பதிவு செய்கிறார்கள்.

### 6.2. முதலமைச்சரின் உதவி மையம்

முதலமைச்சரின் உதவி மையம் (CM helpline centre) என்பது 100 இருக்கைகள் கொண்டு ஒரு நாளைக்கு 2 பிரிவுகளாக (Shifts) காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை நிலையான செயல்பாட்டு நடைமுறைகளுடன், பெறப்பட்ட குறைகளைப் பதிவு செய்தல், வழிபடுத்துதல் (Routing), முற்றாக்குதல் ஆகிய பணிகளோடு வாரத்தின் அனைத்து நாள்களிலும் செயல்பட்டு வரும் ஒரு மையமாகும். இங்கு மனுதாரர்கள் தங்கள் குறைகளைப் பதிவு செய்து கொள்ள ஏதுவாக 1100 என்ற கட்டணமில்லா எண் பயன்பாட்டில் உள்ளது.

## 6.3. புதுமையான முறையில் உயர்த்தப்பட்ட தரத்துடன் சேவை

### 6.3.1. முதலமைச்சரின் ஹெல்ப் லைன் டேஷ் போர்டு

மாநில, மாவட்ட அளவிலான பொதுக்குறைகள் தீர்வு முறையைக் கண்காணிக்க ஏதுவாக மக்களின் குறைகளைத் திறம்பட நிவர்த்தி செய்ய மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் அவ்வப்போது மதிப்பாய்வு செய்யப்படுகிறது.

### 6.3.2. மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழுக்கள்

ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட வருவாய் அலுவலரைத் தலைவராகக் கொண்டு கண்காணிப்புக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு மனுக்களைச் செம்மையாகத் தீர்வு செய்வதைக் கண்காணிக்கிறது. முறையான விசாரணை / கள ஆய்வு இல்லாமல் தீர்வு செய்யப்படும் மனுக்கள் அல்லது தீர்வு செய்யாமல் முற்றாக்கப்படும் மனுக்கள் மீண்டும் திறக்கப்பட்டுப் பொறுப்பு அலுவலரிடம் திருப்பி அனுப்பப்படுகிறது. தவறாகத் தீர்வு செய்யப்பட்ட

மனுக்களை மீண்டும் திறப்பது என்பது கண்காணிப்பு முறையை ஒரு நிலைக்கு மேலே கொண்டு செல்கிறது. இந்த வழியில், கோரிக்கைகளை இயந்திரத்தனமாக முற்றாக்குவதைவிட தகுந்த முறையில் தீர்வு செய்ய அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

### 6.3.3. மேல்முறையீடு

மனு மீதான தீர்வுகளில் திருப்தி ஏற்படாத நிகழ்வுகளில் சம்பந்தப்பட்ட மனுதாரர் அடுத்த நிலை அலுவலரிடம் ஒருமுறை மேல்முறையீடு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. சமர்ப்பிக்கப்படும் ஒவ்வொரு மனுவிற்கும் அலுவலர்கள் சரியான பதிலை வழங்குவதையும், மனுக்கள் சாதாரணமாக நிராகரிக்கப்படாமல் இருப்பதையும் இது உறுதி செய்கிறது.

### 6.3.4. MIS அறிக்கைகள்

துறை / மாவட்டவாரியான அறிக்கைகள் தவிர, இது மூலவாரியாக, காலவாரியாக, அதிகாரிவாரியாக, தடம் வாரியாக (Channel-wise) அறிக்கைகளை வழங்குகிறது. இத்தகைய விரிவான நுண்ணிய

நிலைப்பகுப்பாய்வு, கள அலுவலர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில், குறைகளை நிவர்த்தி செய்ய இலக்கு நிர்ணயிக்க உதவுகிறது. மாநில அளவிலான அலுவலர்கள் இந்த அறிக்கைகளைப் பயன்படுத்தி கோரிக்கை மனுக்களின் முன்னேற்றம் குறித்து மதிப்பாய்வு செய்கிறார்கள்.

### 6.3.5. பின்னூட்ட வழிமுறை (Feedback Mechanism)

பொதுமக்கள் / பயனாளிகளிடமிருந்து பெறப்படும் கருத்துகள் தற்போதையத் திட்டங்கள்/ கொள்கைகளை மெருகூட்டுவதற்கும், புதியத் திட்டங்கள் வடிவமைப்பதற்கும் பயன்படுத்தப்படுகின்றன.

மக்களின் குறிப்பறிந்து செயல்படவும், பின்தங்கியப் பகுதிகளின் வளர்ச்சிப்பணிகள் மேற்கொள்ளவும் மண்டல வாரியான பிரச்சினைகளை அறிந்து கொள்ளவும், அதிகாரிகளின் செயல்பாடுகளை ஆராயவும், திட்டங்களைச் செயல்படுத்துவதில் உள்ள நடைமுறை சிக்கல்களும் அறிந்து கொள்ள வழிவகை செய்கிறது.

## 6.4. பிற முக்கிய நடவடிக்கைகள்

முதல்வரின் முகவரித்துறை மூலமாக விளிம்புநிலை மக்களின் நலன், சிறப்பு அதிரடிப்படையால் அடையாளம் காணப்பட்ட கிராமங்களில் உள்ள பழங்குடியினர் பகுதிகளில் வாழும் மக்களின் நலன் சார்ந்த சமூகம் தொடர்பான, தனிப்பட்ட கோரிக்கை மனுக்கள் பதிவுசெய்யப்பட்டு வழக்கமான ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு அதன் நேர்மறையான தீர்வு வரை பின் தொடரப்படுகின்றன.

இவ்வாறாக, இத்துறையானது பொதுமக்களின் மனுக்களை விரைந்து தீர்வு செய்வது மட்டுமின்றி, குறைகள் அடிப்படையில் நிவர்த்தி செய்யப்படுவதையும் உறுதிசெய்ய அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது.

**7. இராணுவம்**

1971–ஆம் ஆண்டு இந்தியா, பாகிஸ்தானை வென்று வங்கதேசம் என்ற தனிநாடு உருவான வரலாற்று வெற்றியின் பொன்விழா 20.07.2021 முதல் 31.07.2021 வரை தமிழ்நாட்டில் கொண்டாடப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 30.07.2021 அன்று கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவிற்குத் தலைமையேற்று, இந்தியாவின் நான்கு திசைகளிலும் பயணித்த வெற்றி தீபத்தைத் தென்மண்டல இராணுவத் தளபதியிடமிருந்து பெற்று வீரவணக்கம் செலுத்தியதுடன் இப்போரில் பங்கேற்றப் பத்துப் போர் வீரர்களையும், போரில் பங்கேற்று உயிர்த்தியாகம் செய்த மூன்று வீரர்களின் வீரமங்கையரையும் அவர்களது துணிச்சலான வீரதீரச் செயல்களைப் பாராட்டி நினைவுப்பரிசு வழங்கி கௌரவித்தார்கள். இந்தோ–பாகிஸ்தான் போரின் வெற்றி நாளான 16.12.2021 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

சென்னை, காமராசர் சாலையில் அமைந்துள்ள போர் நினைவுச் சின்னத்தில் தாய்த்திருநாட்டிற்காக உயிர்த்தியாகம் செய்த இராணுவத்தினரை நினைவு கூறும் வகையில் மரியாதை செலுத்தினார்கள்.

2021–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14–ஆம் நாள் ஆந்திர மாநிலம் திருப்பதியில் ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சர் தலைமையில் நடைபெற்ற 29வது தென்மண்டல குழு கூட்டத்தில், தமிழ்நாட்டு மூத்த அமைச்சர்களும், மூத்த அதிகாரிகளும் பங்கேற்றனர்.

கோயம்புத்தூர் மாவட்டம் சூலூர் விமானத்தளத்திலிருந்து இந்திய முப்படைத் தளபதி, அவரது மனைவி, உயர் இராணுவ அதிகாரிகள் பயணித்த இந்திய விமானப்படை ஹெலிகாப்டர் நீலகிரி மாவட்டம் வெலிங்டன் நோக்கி 08.12.2021 அன்று பயணித்த போது குன்னூர் அருகே திடீரென விபத்து ஏற்பட்டதை அறிந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக மீட்பு

நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு அலுவலர்களை அறிவுறுத்தியதுடன், நேரடியாக வெலிங்டன் விரைந்தார்கள். இவ்விபத்தில் உயிரிழந்து நீலகிரி மாவட்டம், பாதுகாப்புச் சேவைகள் பணியாளர் கல்லூரி, வெலிங்டன் மைதானத்தில் வைக்கப்பட்டிருந்த இந்திய முப்படைத் தலைமைத் தளபதி ஜெனரல் உயர்திரு பிபின்ராவத் உள்ளிட்ட இராணுவ அதிகாரிகளின் உடலுக்கு மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்கள். இந்திய விமானப்படையின் தென்மண்டல தலைவர் இந்நிகழ்வின் போது விரைந்து செயலாற்றிய தமிழ்நாட்டு அரசையும், அரசு அலுவலர்கள், ஊர் பொதுமக்களையும் பாராட்டி நன்றி தெரிவித்துள்ளார்.

## 8. முன்னாள் படைவீரர் நலத்துறை

முப்படை வீரர்கள் தங்களது வீரம், தியாகம், நாட்டுப்பற்று ஆகியவற்றை வெளிப்படுத்தி, அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்பட்டு நமது தேசிய ஒருமைப்பாட்டின் அடையாளமாகத் திகழ்கின்றனர். இம்முப்படை வீரர்களின் வீரதீரச் செயல்களை மதித்துப் போற்றுவதுடன், அவர்தம் மறுவாழ்விற்காகப் பல்வேறு நலத்திட்டங்கள், மானியங்கள், நிதி உதவிகள் வழங்கி துயர் களைவதிலும், படைவீரர் / முன்னாள் படைவீரர் குடும்பத்தினருக்குத் தேவையான உதவிகளை அளிப்பதிலும், முன்னாள் படை வீரர்களின் நலனைக் காத்திடுவதிலும் நாட்டிலேயே பிற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாகத் தமிழ்நாடு திகழ்கிறது. மேலும், இந்திய இராணுவத்திற்கு இளைஞர்களை அனுப்புவதிலும் தமிழ்நாடு பெரும்பங்கு வகிக்கிறது.

முதன் முதலில் மெட்ராஸ் தரைப்படைவீரர் வாரியம் 1919–ஆம் ஆண்டில் முப்படையில் பணிபுரிந்து கொண்டிருந்த வீரர்களின் பணியினைப் போற்றவும்,

ஓய்வுபெற்ற வீரர்களின் நலன் காக்கவும் அமைக்கப்பட்டது. அதற்கான தேவைகள் முடிக்கப்பட்ட நிலையில் 1930–ஆம் ஆண்டில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. மீண்டும் 1943–ஆம் ஆண்டு அப்போதைய இந்திய அரசால் மெட்ராஸ் மாகாண தரைப்படை, கப்பற்படை, விமானப்படை வாரியங்கள் புனரமைக்கப்பட்டபோது மெட்ராஸ் தரைப்படை வீரர் வாரியமும் புனரமைக்கப்பட்டது. இவ்வாரியம், 1956–ஆம் ஆண்டில் மெட்ராஸ் மாநில தரைப்படை, கப்பற்படை, விமானப்படை வீரர்கள் வாரியம் எனவும், பின்னர் 1969–ஆம் ஆண்டில் "தமிழ்நாடு மாநில முப்படை வீரர்கள் வாரியம்" எனவும் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இவ்வாரியம், மாண்புமிகு ஆளுநர் அவர்களைப் புரவலராகவும், மாண்புமிகு முன்னாள் படைவீரர் நல அமைச்சர் அவர்களைத் தலைவராகவும் கொண்டு செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முப்படை வீரர்கள் வாரியம், மெட்ராஸ் தொகுப்பு நிதி அலுவலகம் ஆகியவை 1974–இல்

ஒருங்கிணைக்கப்பட்டு முன்னாள் படைவீரர் நல இயக்ககம் உருவாக்கப்பட்டது. இவ்வியக்ககம் சமூக நலத்துறையின் நிர்வாகக் கட்டுபாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டு, பின்னர் 1976–இல் பொதுத் துறையின் நிர்வாகக் கட்டுபாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது. இத்துறையின் நிர்வாகச் செலவுகள் ஒன்றிய, மாநில அரசுகளால் 60:40 என்ற பங்கீட்டு விகிதத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முன்னாள் படைவீரர்கள், படைப்பணி புரிவோர், படைப்பணியில் இறந்தோர் ஆகியோரின் குடும்பத்தினருக்கு உதவிடும் வகையில் அரசு வகுக்கும் கொள்கைகளையும், திட்டங்களையும் முன்னாள் படைவீரர் நல இயக்ககம் செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டைச் சேர்ந்த சுமார் 2500 படைவீரர்கள் ஒவ்வொரு ஆண்டும் படைப்பணியிலிருந்து ஓய்வு பெறுகின்றனர். முன்னாள் படைவீரர் நல இயக்ககத்தில் 1,27,862 முன்னாள் படைவீரர்கள், 57,816 கைம்பெண்கள் எனப் பதிவு

செய்துள்ளவர்களின் எண்ணிக்கை 1,85,678 ஆகும். முன்னாள் படைவீரர்கள், அவர்களைச் சார்ந்தோரின் தேவைகளும், கோரிக்கைகளும் 30 மாவட்ட அலுவலகங்கள் மூலம் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

**8.1. முன்னாள் படைவீரர் நலத் துறையின் முக்கியத் திட்டங்கள் / நிதியுதவிகள் பின்வருமாறு :–**

1. தமிழ்நாடு அரசுத் திட்டங்கள் / நிதியுதவிகள்
2. துறை சார்ந்த திட்டங்கள் / நிதியுதவிகள்
    - கொடிநாள் நிதி
    - தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி
    - தொகுப்பு நிதி

**8.2. தமிழ்நாடு அரசுத் திட்டங்கள், நிதியுதவிகள்**

**8.2.1. வீரதீரச் செயல்களுக்கான விருது, போற்றத்தக்க பணிக்காக பதக்கம் பெற்றவர்களுக்கான பண முடிப்பு**

வீரதீரச் செயல்களுக்கான விருதுகள், போற்றத்தக்க பணிபுரிந்தமைக்கான பதக்கங்களைப் பெற்றவர்களுக்கு அரசால் பணமுடிப்பு வழங்கப்படுகிறது.

2021–22–ஆம் நிதியாண்டில், வீர தீரச் செயல்களுக்கான விருது, போற்றத்தக்க பணிக்காகப் பதக்கம் பெற்ற ஆறு வீரர்களுக்கு ரூ.13.40 இலட்சம் பணமுடிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும், பிராந்திய இராணுவத்தில் பதக்கம் பெற்றவர்களில் ஒரு வீரருக்கு ரூ.4,000/– வீதம் 32 வீரர்களுக்கு மொத்தம் ரூ.1,28,000/– வழங்கப்பட்டுள்ளது.

### 8.2.2. **போரில் உயிர்நீத்தோருக்கான கருணைத் தொகை**

போர், குடிமையியல் நிருவாகத்திற்கு உதவிடும் நடவடிக்கையின் போது உயிரிழந்த / ஊனமுற்ற படைவீரர்களின் தியாகத்தைப் போற்றும் வகையிலும், அவர்தம் குடும்பத்தினரின் துயர் நீக்கிடும் வகையிலும் ரூ.20 இலட்சம் வரை கருணைத் தொகை அரசால் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், கருணைத் தொகை தமிழ்நாட்டைச் சேர்ந்த துணை இராணுவப் படையினருக்கும் வழங்கப்பட்டு வருகிறது. உயிரிழந்த 9 படைவீரர்களின் வாரிசுதாரர்களுக்கு ரூ.1.80 கோடியும், முழுவதுமாக ஊனமுற்ற துணை இராணுவப் படைவீரர்

ஒருவருக்கு ரூ.15.00 இலட்சம் என மொத்தம் ரூ.1.95 கோடி 2021–22–ஆம் நிதியாண்டில் வழங்கப்பட்டுள்ளது.

### 8.2.3. போர்ப் பணி ஊக்க மானியம்

தமது ஒரே மகன் / மகளைப் படைப்பணிக்கு அனுப்பிய பெற்றோரைக் கௌரவிக்கும் வகையில் ஒரு முறை மட்டும் ரூ.20,000/– தொகையுடன் வெள்ளிப் பதக்கமும், ஒன்றுக்கு மேற்பட்ட மகன்/ மகளைப் படைப்பணிக்கு அனுப்பிய பெற்றோருக்கு ஒரு முறை மட்டும் ரூ.25,000/– தொகையுடன் வெள்ளிப் பதக்கமும் வழங்கப்பட்டு வருகிறது. 2021–22–ஆம் நிதியாண்டில் ரூ.70.78 இலட்சம் 104 பெற்றோருக்கு வழங்கப்பட்டுள்ளது.

### 8.2.4. இராணுவப் பணியில் சேரும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் தொகுப்பு மானியம்

தமிழ்நாட்டிலிருந்து இராணுவப் பணியில் சேரும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளை ஊக்கப்படுத்தவும், இராணுவப் பணிப் பயிற்சி

காலத்தின்போது ஏற்படும் செலவினங்களை எதிர்கொள்ளவும் தொகுப்பு மானியம் (Lumpsum Grant) பின்வருமாறு வழங்கப்பட்டு வருகிறது :–

| வ. எண். | விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | முப்படையில் நிரந்தர படைத்துறை அலுவலர் (Permanent Commissioned Officers) பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் (NDA / IMA / Naval / Air Force Academy) முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு | 1,00,000/– |
| 2. | முப்படையில் குறுகியகால படைத்துறை அலுவலர் (Short Service Commissioned Officers) பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு | 50,000/– |
| 3. | இராணுவத்தில் இளநிலை படை அலுவலர்கள், இதர பதவிகளின் (Junior Commissioned Officer and Other Ranks) பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு | 25,000/– |

2021–22 ஆம் நிதியாண்டில், ரூ.4.25 இலட்சம் 7 முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### 8.2.5. கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு

கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு, படைப்பணியில் உயிர்நீத்தோர், போர், போரையொத்த நடவடிக்கைகளில் உயிரிழந்தவர்தம் வாரிசுகளில் ஒருவருக்கு வழங்கப்பட்டு வருகிறது. கருணை அடிப்படையில் பணி நியமனம் 2021–22–ஆம் நிதியாண்டில் 53 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### 8.2.6. மறு வேலை வாய்ப்பு அளித்தல்

முன்னாள் படைவீரர்கள் படைப்பணியிலிருந்து பெரும்பாலும் இளம் வயதிலேயே திறமையான பணிக்காலத்தை மீதமாகக் கொண்டு விலகுவதால், அவர்களுக்கு மறு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில், தமிழ்நாடு அரசிலும், அரசுசார்ந்த துறைகளிலும் இட ஒதுக்கீடுகள் பின்வருமாறு வழங்கப்படுகின்றன :–

| வ. எண். | விவரம் | இட ஒதுக்கீடு சதவீதம் |
|---|---|---|
| 1. | பிரிவு "சி" பணியிடங்கள் | 5 |
| 2. | அரசிலும், அரசு சார்ந்த நிறுவனங்களில் அடிப்படைப் பணியாளர்கள் பணியிடங்கள் | 10 |
| 3. | வனக்காவலர் பணியிடங்கள் | 10 |
| 4. | வனப்பாதுகாவலர் பணியிடங்கள் | 5 |
| 5. | தேசிய மாணவர் படை அலுவலகங்களில் இலஸ்கர், ஓட்டுநர், இரவுக் காவலர்கள் பணியிடங்கள் | 25 |
| 6. | சீருடைப் பணிப் பிரிவில் பிரிவு "சி" பணியிடங்கள் | 5 |
| 7. | கால்நடை ஆய்வாளர் | 5 |

ஏப்ரல் 2021 முதல் மார்ச் 2022 வரையிலான காலத்தில், அரசு / அரசு சார்ந்த / வங்கிகள், தனியார் நிறுவனங்களில் "சி" பிரிவில் 482 நபர்களும், "டி" பிரிவில் 340 நபர்களும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

### 8.2.7. கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீடு

பல்வேறு கல்வி நிலையங்களில் உயர் கல்விக்கு (மருத்துவ / பொறியியல் உட்பட) முன்னாள்

படைவீரர்களின் சிறார்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது.

| வ. எண் | பாடப்பிரிவு | இடஒதுக்கீடு எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | எம்.பி.பி.எஸ்., (மருத்துவம்) | 10 |
| 2. | பி.டி.எஸ்., (பல் மருத்துவம்) | 01 |
| 3. | பி.இ., – அண்ணா பல்கலைகழகம் | 150 |
| 4. | பி.இ., (லேட்டரல் என்ட்ரி) | 15 |
| 5. | பி.பார்ம்., | 01 |
| 6. | பி.பி.டி., (B.P.T) | 01 |
| 7. | பி.எஸ்.சி., (நர்சிங்) | 04 |
| 8. | டி.பார்ம்., | மதுரை – 04<br>கோயம்புத்தூர் – 02<br>தஞ்சாவூர் – 02 |
| 9. | நர்சிங் டிப்ளமோ | 57 |
| 10. | பி.எட்., (இளநிலை ஆசிரியர்) | அண்ணாமலை பல்கலைகழகம் – 02<br>அழகப்பா பல்கலைகழகம் – 01<br>அவினாசிலிங்கம் பல்கலைகழகம் – 01<br>ஒவ்வொரு அரசு, அரசு உதவி பெறும் கல்வி |

| | | |
|---|---|---|
| | | நிலையங்களில் தலா ஓர் இடம். |
| 11. | டி.ட்டி.எட்., (ஆசிரியர் பட்டயப் படிப்பு) (D.T.Ed) | 132 (ஒவ்வொரு கல்வி நிறுவனங்களில் தலா மூன்று இடங்கள்) |
| 12. | பி.எஸ்.சி., (வேளாண்மை) | 06 |
| 13. | பி.எஸ்.சி., (தோட்டக்கலை) | 01 |
| 14. | பி.இ., (வேளாண்மை) | 01 |
| 15. | கலை, கைவினைக் கல்லூரி | 04 |
| 16. | ஐ.டி.ஐ., (I.T.I) | ஒவ்வொரு பயிற்சி நிலையத்திலும் தலா ஐந்து இடங்கள் |
| 17. | பாலிடெக்னிக் | 80 |
| 18. | பி.வி.எஸ்.ஸி., | 02 |
| 19. | பி.எப்.எஸ்.ஸி., | 01 |
| 20. | இளங்கலை பட்டப்படிப்பு | ஒவ்வொரு கல்லூரியிலும் தலா ஆறு இடங்கள்.<br>இரண்டு கிளைகள் கொண்ட கல்லூரிகளில் தலா இரண்டு இடங்கள். |
| 21. | பகுதிநேர பாலிடெக்னிக் | 01 (ஒவ்வொரு பகுதிநேர பாலிடெக்னிக்கிலும்) |

| | | |
|---|---|---|
| 22. | பி.எல்., (3/5 ஆண்டுகள்) | 1% |
| 23. | பி.ஏ., பி.எல். (ஹானர்ஸ்) | 1% |
| 24. | இந்திய மருத்துவம் பி.எஸ்.எம்.எஸ்., (B.S.M.S) | 01 |
| 25. | பி.யு.எம்.எஸ்., (B.U.M.S) | 01 |
| 26. | பி.ஹெச்.எம்.எஸ்., (B.H.M.S) | 01 |
| 27. | பி.டெக்., (எப்.பி.டி) B.Tech (FPT) | 01 |

### 8.2.8. இரு குடும்ப ஓய்வூதியம் (Dual Family Pension)

இராணுவத்தில் பணியாற்றி ஓய்வுபெற்று மறு வேலைவாய்ப்பின் மூலம் தமிழ்நாடு அரசில் பணியாற்றிய (Civil) முன்னாள் படைவீரரின் வாரிசுதாரருக்கு, இராணுவக் குடும்ப ஓய்வூதியத்துடன் தமிழ்நாடு அரசுப் பணிக்கான குடும்ப ஓய்வூதியமும் சேர்த்து இரு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது இரு குடும்ப ஓய்வூதியம் தொடர்பான 131 விண்ணப்பங்கள் பரிந்துரைக்கப்பட்டு அவற்றில் 129 விண்ணப்பதாரர்களுக்குக் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

### 8.2.9. பதினைந்து ஆண்டு கால இராணுவப் பணியினை பட்டதாரி கல்விக்கு இணையாகக் கருதுதல்

பத்தாம் வகுப்புத் தேர்ச்சிபெற்று இராணுவத்தில் பதினைந்து ஆண்டு காலம் பணியாற்றிய முன்னாள் படைவீரர்கள் மறுவேலைவாய்ப்பிற்குக் குடிமையியல் (சிவில்) பிரிவில் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் பட்டப்படிப்பிற்கு நிகரான பட்டமாகக் கருதிட தமிழ்நாடு அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

இவ்வாணை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், அரசு நிறுவனங்களில் பட்டப்படிப்புத் தகுதிகளுக்கான "சி" பிரிவு பணியிடங்களுக்கு முன்னாள் படைவீரர்களைத் தேர்வு செய்ய வழிவகை செய்கிறது.

### 8.2.10. கோயில் பாதுகாப்புப் படை

தமிழ்நாட்டுக் கோயில்களிலுள்ள சிலைகள், நகைகள், உண்டியல் சேகரிப்புகள், விலையுயர்ந்த பொருள்களைப் பாதுகாப்பதற்காகக் கோயில் பாதுகாப்புப் படை நிறுவப்பட்டு 974 முன்னாள் படைவீரர்கள்

கோயில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

### 8.2.11. தேர்தல் பாதுகாப்புப் பணி

நாடாளுமன்றம் / சட்டமன்றம் / உள்ளாட்சி தேர்தல்களின்போது தேர்தல் பாதுகாப்புப் பணிகளில், பாதுகாப்புப் பணியிலிருக்கும் காவல்துறையினருக்கு உதவிடும் வகையில் முன்னாள் படைவீரர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். இவ்வகையில் சுமார் 10,000 முன்னாள் படைவீரர்கள் ஒவ்வொரு தேர்தலின்போதும் மதிப்பூதியம் அடிப்படையில் பாதுகாப்புப் பணியில் பணியமர்த்தப்பட்டு வருகின்றனர்.

ஏப்ரல் 2021–இல் நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலின் போது 13,889 முன்னாள் படைவீரர்கள் தேர்தல் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். அவ்வாறே பிப்ரவரி 2022–இல் சென்னை, திருவள்ளூர், கோயம்புத்தூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி உள்ளிட்ட 06 மாவட்டங்களில் நடைபெற்ற நகர்ப்புற உள்ளாட்சி

தேர்தலில் 883 முன்னாள் படைவீரர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

### 8.3. கொடிநாள் நிதி

இந்நிதி, மாண்புமிகு ஆளுநர் அவர்களைத் தலைவராகக் கொண்ட தமிழ்நாடு கொடிநாள் நிலைக் குழுவினால் நிருவகிக்கப்படுகிறது. மாண்புமிகு முன்னாள் படைவீரர் நல அமைச்சர் அவர்கள் இக்குழுவின் துணைத் தலைவர் ஆவார்.

முன்னாள் படைவீரர்களுக்கு, திருமணம், தொழில், குடியிருப்பு, மருத்துவம் தொடர்பான மானியங்கள், சிறார்களுக்கான கல்வி மேம்பாட்டு நிதியுதவி, பயிற்சித் திட்டங்களுக்கு நிதி வழங்குதல் ஆகியவற்றை நிறைவேற்றிட கொடிநாள் நிதி திரட்டப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் திங்கள் 7–ஆம் நாள் முதல் அதற்கடுத்த ஆண்டின் டிசம்பர் திங்கள் 6–ஆம் நாள் வரை கொடி நாள் நிதி திரட்டப்படுகிறது. கொடிநாள் நிதி வசூல் மூலம் பெறப்படும் நிதியானது, தமிழ்நாடு முன்னாள் படைவீரர்

நல நிதி, தொகுப்பு நிதி ஆகிய இரு நல நிதிகள் மூலம் முன்னாள் படைவீரர்களுக்கும், அவர்களைச் சார்ந்தோருக்குமான நலத் திட்ட உதவிகளைச் செயல்படுத்தப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

கொடிநாள் வசூல் நிதி இலக்கின் 5% தொகுப்பு நிதிக்கும், எஞ்சிய தொகை தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதிக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது. 2020–21–ஆம் ஆண்டில் (07.12.2020 முதல் 06.12.2021 வரை) ரூ.31.94 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, ரூ.43.34 கோடியும், 2021–22–ஆம் ஆண்டில் 31.03.2022 வரையில் ரூ.7.22 கோடியும் வசூல் செய்யப்பட்டுள்ளது.

படைவீரர் கொடி நாள் நிதிக்கு வழங்கப்படும் நன்கொடைகளுக்கு, வருமான வரிச் சட்டம், 1961–இன் பிரிவு எண். 80G (5) (vi)–இன் கீழ் வருமான வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் படைவீரர்களுக்கான நலத் திட்டங்கள், சலுகைகள் பற்றிய விரிவான விவரங்களை உள்ளடக்கிய கொடிநாள் மலர் தமிழ், ஆங்கில மொழிகளில் ஆண்டுதோறும் வெளியிடப்பட்டு வருகிறது.

## 8.4. தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி

முன்னாள் படைவீரர் நலத்துறையின் இயக்குநர் அவர்களைத் தலைவராகக் கொண்டு தமிழ்நாடு முப்படைவீரர் வாரியத்தின் உட்குழுவான தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதிக் குழுச் செயல்படுகிறது.

கொடிநாள் நிதி இலக்கின் 5% தொகுப்பு நிதிக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது போக வசூலிக்கும் மீதத் தொகை, வைப்பு நிதியின் வட்டி, சொத்துகளிலிருந்து பெறப்படும் உரிமக் கட்டணம் ஆகியவை இந்நிதியின் நிதி ஆதாரமாகும்.

முன்னாள் படைவீரர்களுக்கும் அவர்களைச் சார்ந்தோருக்கும் இரண்டாம் உலகப்போர் நிதியுதவி, ஆயுட்கால மாதாந்திர நிதியுதவி, பல்வேறு வகையிலான மருத்துவ நிதியுதவிகள், திருமண

நிதியுதவி, செயற்கை உபகரணங்களுக்கான நிதியுதவி, ஈமச்சடங்கு நிதியுதவிகள் போன்றவை தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகின்றன.

**தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து வழங்கப்படும் நிதியுதவிகள் பின்வருமாறு :–**

| வ. எண். | நிதியுதவியின் பெயர் | தற்போது வழங்கப்படும் தொகை ரூ. | 2021–2022–ஆம் நிதியாண்டில் ஒப்பளிக்கப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|---|
| **அ) மாதாந்திர நிதியுதவி** | | | |
| 1. | இரண்டாம் உலகப்போர் (முன்னாள் படைவீரர்) நிதியுதவி | 10,000/– | 88,30,000/– |
| 2. | உலகப்போர் (கைம் பெண்கள்) நிதியுதவி | 4,000/– | 11,17,72,000/– |
| 3. | முதியோர் நிதியுதவி | 4,000/– | 4,98,20,000/– |
| 4. | தொழுநோய் / காச நோயாளிகளுக்கான நிவாரணம் / மாற்றுத் திறனாளிகளுக்கான நிவாரணம் | 5,000/– | 81,98,000/– |
| 5. | பக்கவாத நிவாரணம் / பார்வையற்றோருக்கான நிவாரணம் / புற்றுநோய் நிவாரணம் / மனவளர்ச்சிக் குன்றிய சிறார்களுக்கான நிவாரணம், மனநோய் கொண்ட முன்னாள் படைவீரரின் மனைவி, | 7,000/– | 6,34,30,500/– |

| | | | |
|---|---|---|---|
| | கைம்பெண்களுக்கான நிவாரணம் | | |
| **ஆ) இதர நிதி உதவிகள்** | | | |
| 1. | திருமண மானியம் (இரண்டு மகள்கள் வரை) | 25,000/- | 1,64,00,000/- |
| 2. | ஈமச்சடங்கு மானியம் (முன்னாள் படைவீரர்களுக்கு) | 10,000/- | 2,95,70,000/- |
| 3 | ஈமச்சடங்கு மானியம் (கைம்பெண்கள்) | 7,000/- | 62,99,000/- |
| 4. | செயற்கை உபகரணங்கள்/ கண் கண்ணாடி பொருத்துவது உள்ளிட்ட பிற நலன் சார்ந்த திட்டங்களுக்கு ஒப்பளிக்கப்பட்ட தொகை | 4,000/- | 46,17,221/- |
| 5. | வீடு கட்டுவதற்கான கடன் தொகை மானியம், வீட்டு வரி மீளப்பெறுதல், வேலை வாய்ப்புப் பயிற்சி மானியம் உள்ளிட்ட பிற திட்டங்களுக்கு ஒப்பளிக்கப்பட்ட தொகை | - | 17,11,302/- |
| | | **மொத்தம்** | **30,06,48,023/-** |

2021-22-ஆம் நிதியாண்டில், 10,721 முன்னாள் படைவீரர்களுக்கும், அவர்களைச் சார்ந்தோருக்கும் இந்நிதியிலிருந்து பல்வேறு திட்டங்களுக்கு நிதியுதவிகளும் மானியங்களும் மொத்தம் ரூ.30.06 கோடி வழங்கப்பட்டுள்ளது.

### 8.4.1. இராணுவ ஆட்சேர்ப்பு முகாம்

இராணுவ ஆட்சேர்ப்பு முகாமிற்கு மாவட்ட நிருவாகம் மூலம் மேற்கொள்ளப்படும் செலவினத்திற்காக ஒரு முகாமிற்கு ரூ.6 இலட்சம் வீதம் ஆண்டிற்கு ஐந்து முகாம்களுக்கு ரூ.30 இலட்சம் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

### 8.4.2. முன்னாள் படைவீரர், அவர்களைச் சார்ந்தோரில் மகளிருக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி

முன்னாள் படைவீரர், அவர்களைச் சார்ந்தோருக்குத் தையற்பயிற்சி அளிப்பதற்காக வேலூர், கிருஷ்ணகிரி மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகங்களில் தையல் அலகு செயல்பட்டு வருகிறது. இத்தையல் அலகுகளில் முன்னாள் படைவீரர்கள் அவர்தம் குடும்பங்களைச் சார்ந்த படைவீரர்களின் கைம்பெண்கள் / மனைவி / திருமணமாகாத மகள் / திருமணமாகாத சகோதரிகள் / கைம்பெண் மகள் / விவாகரத்தான மகள் / விவாகரத்தான

சகோதரிகள் ஆகியோருக்கு ஆறு மாத காலத் தையற் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. பயிற்சி பெறுபவர்களுக்குப் பயிற்சி உதவித் தொகையாக நாளொன்றுக்கு ரூ.50/–ம், கச்சாப் பொருள் வாங்குவதற்கு மாதம் ரூ.1,000/–ம் வழங்கப்பட்டு வருகிறது. பயிற்சி முடித்தவர்களுக்கு விலையில்லா ஒரு தையல் இயந்திரமும் வழங்கப்பட்டு வருகிறது.

### 8.4.3. தட்டச்சு, சுருக்கெழுத்துப் பயிற்சியில் தேர்ச்சி பெறுபவர்களுக்கான உதவித்தொகை

முன்னாள் படைவீரர்களுக்கும் அவர்களைச் சார்ந்தோருக்கும் தட்டச்சு, சுருக்கெழுத்துப் போன்ற தொழில்நுட்பப் பயிற்சியில் தேர்ச்சி பெறுபவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் உதவித் தொகை குறித்த விவரங்கள் பின்வருமாறு :–

| வ. எண். | விவரம் | தொகை |
|---|---|---|
| 1. | தமிழ், ஆங்கிலம் தட்டச்சு (கீழ்நிலை) | ரூ. 3,000/– |
| 2. | தமிழ், ஆங்கிலம் தட்டச்சு (மேல்நிலை) | ரூ. 5,000/– |
| 3. | தமிழ், ஆங்கிலம் சுருக்கெழுத்து (கீழ்நிலை) | ரூ. 7,000/– |
| 4. | தமிழ், ஆங்கிலம் சுருக்கெழுத்து (மேல்நிலை) | ரூ. 10,000/– |

### 8.4.4. வீடு கட்டும் மானியம்

முன்னாள் படைவீரர்கள், அவர்தம் கைம்பெண்கள் (அவில்தார் படைத்தரம் வரையில்) வீடு கட்டுவதற்கும் / வாங்குவதற்கும் பெறும் கடன் தொகைக்கு ரூ.1 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. 2021–22–ஆம் நிதியாண்டில் 14 நபர்களுக்கு ரூ.14 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

### 8.4.5. படைவீரர் மாளிகை / முன்னாள் படைவீரர் மையம் / முன்னாள் படைவீரர் நல இயக்கக வளாகம்

நலத் திட்டங்களுக்கான நிதிகளைத் திரட்டும் வகையில், முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து 10 படைவீரர் மாளிகையும், 20 முன்னாள் படைவீரர் மையமும், 1 முன்னாள் படைவீரர் நல இயக்கக வளாகமும் கட்டப்பட்டுள்ளன. இதன் மூலம் கிடைக்கும் வருவாய், நல நிதியில் சேர்க்கப்படுகிறது. இச்சொத்துகள் மூலம் 2021–22–ஆம் நிதியாண்டில் ரூ.3.55 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

### 8.4.6. மின் ஆளுமைத் திட்டம்

முன்னாள் படைவீரர் நலத் துறையில் தேசியத் தகவல் மையத்தின் மூலம் மின் ஆளுமைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. முன்னாள் படைவீரர்கள், அவர்தம் குடும்பத்தைச் சார்ந்த கைம்பெண்களின் அனைத்து ஆவணங்களும் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாடு மின்னணுவியல் கழகம் மூலமாக ஒப்பந்த அடிப்படையில் ஒரு பணியாளர் நியமனம் செய்யப்பட்டு மின் ஆளுமையில் மாவட்ட அலுவலகங்களிலிருந்து பெறப்படும் குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் கணினியில் நேரடியாகப் பதிவு செய்தல், அடையாள அட்டை வழங்குதல், முன்னாள் படைவீரர்களின் சிறார்கள் கல்லூரியில் சேர்வதற்கான சார்ந்தோர் சான்று வழங்கல், முன்னாள் படைவீரர்களின் வேலைவாய்ப்பிற்கான பதிவுகள் மின் ஆளுமை மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொகுப்பு நிதியிலிருந்து கல்வி உதவித் தொகை பெறுவதற்கு முன்னாள் படைவீரர்கள்,

அவர்களைச் சார்ந்தோர் இணைய வழி மூலம் விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## 8.5. தொகுப்பு நிதி

தொகுப்பு நிதி மாண்புமிகு ஆளுநர் அவர்களைத் தலைமையாகக் கொண்ட மாநில மேலாண்மைக் குழுவால் நிருவகிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு முன்னாள் படைவீரர் நல அமைச்சர், அரசு தலைமைச் செயலாளர், தென்மண்டல இராணுவத் தளபதி ஆகியோர் இக்குழுவின் துணைத் தலைவர் ஆவர். இந்நிதியின் நிலையான உட்குழு அரசு தலைமைச் செயலாளர் அவர்களைத் தலைவராகக் கொண்டு செயல்படுகிறது. கொடிநாள் நிதி இலக்கின் 5%, வைப்பு நிதியின் வைப்புத் தொகையின் வட்டி ஆகியவை இந்நிதியின் நிதி ஆதாரம் ஆகும்.

போரில் உயிர் நீத்தோர் குடும்பத்தினர், போரில் ஊனமுற்ற முன்னாள் படைவீரர்களுக்குப் பல்வேறு நலத் திட்ட உதவிகள் இந்நிதியிலிருந்து வழங்குவதுடன், சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ்

பெறும் வங்கி கடன்களுக்கு வட்டி மானியமும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கான கல்வி மானியம் ரூ.500/– முதல் ரூ.25,000/– வரை பள்ளிக் கல்வியிலிருந்து முதுகலைக் கல்வி, தொழில்நுட்பக் கல்விக்கும் வழங்கப்படுகிறது. 2021–22–ஆம் நிதியாண்டில் 4,903 முன்னாள் படைவீரர்கள், அவர்களைச் சார்ந்தோருக்கு இந்நிதியிலிருந்து ரூ.8.99 கோடி நிதியுதவி / மானியங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**தொகுப்பு நிதியிலிருந்து வழங்கப்படும் நிதியுதவிகள் பின்வருமாறு :–**

| வ. எண். | நிதியுதவியின் பெயர் | தற்போது வழங்கப்படும் தொகை ரூ. | 2021–2022–ஆம் நிதியாண்டில் ஒப்பளிக்கப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | போரில் வீர மரணம் அடைந்தோரின் வாரிசுதாரர்களுக்குக் கருணைத் தொகை | 1,00,000/– | 5,00,000/– |
| 2. | போரில் ஊனமுற்றோருக்குக் கருணைத் தொகை | 50,000/– | 2,60,000/– |

| | | | |
|---|---|---|---|
| 3. | போரில் வீர மரணம் அடைந்தோர், 50%–க்கு மேல் ஊனமுற்றோரின் மகள்களுக்குத் திருமண நிதியுதவி | 1,00,000/–<br>8 கிராம் தங்கம் | 2,00,000/– |
| 4. | போரில் 50%–க்கு கீழ் ஊனமுற்றோரின் மகள்களுக்குத் திருமண நிதியுதவி | 50,000/–<br>8 கிராம் தங்கம் | 2,50,000/– |
| 5. | கல்வி உதவித் தொகை (பள்ளி கல்வி முதல் தொழிற் கல்வி வரையில்) | 500/– முதல்<br>25,000/– வரை | 7,66,82,545/– |
| 6. | போரில் வீர மரணம் அடைந்தோர் / ஊனமுற்றோருக்கு வீடு கட்ட மானியம் | 50,000/– | 50,000/– |
| 7. | வருடாந்திர பராமரிப்பு மானியம் (அரசால் மீள வழங்கப்படுகிறது) | 25,000/– | 1,20,25,000/– |
| | | **மொத்தம்** | **8,99,67,545/–** |

### 8.5.1. சுய வேலை வாய்ப்புத் திட்டங்கள்

சுய வேலை வாய்ப்பிற்காகப் பெறப்படும் ரூ.10 இலட்சம் வரையிலான வங்கி கடன்களுக்கு 75% வட்டி மானியமும், சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.15 இலட்சம் வரையிலான வங்கிக் கடன்களுக்கு 100% வட்டி மானியமும் தொகுப்பு நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. 2021–22–ஆம் நிதியாண்டில்,

இத்திட்டங்களின் மூலம் ரூ.44.73 இலட்சம் மானியமாக 439 முன்னாள் படைவீரர்களுக்கும், 4 சுய உதவிக் குழுக்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. முன்னாள் படைவீரர்கள் பயனடையும் வகையில் சுய வேலைவாய்ப்பினை மேலும், அதிகரித்திட அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

## 9. தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (டெக்ஸ்கோ)

தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (TEXCO), 1956–ஆம் ஆண்டின் நிறுவன (கம்பெனிகள்) சட்டத்தின்படி 28.01.1986 அன்று பதிவு செய்யப்பட்டு, தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக நிறுவப்பட்டது. முன்னாள் படைவீரர் நல இயக்ககத்தில் வேலைவாய்ப்பிற்காகப் பதிவு செய்துள்ள முன்னாள் படைவீரர்களைப் பல்வேறு ஒன்றிய, மாநில அரசு அலுவலகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், ஏனைய வாரியங்களில் பாதுகாப்புப் பணியாளர்கள், ஓட்டுநர்கள், எழுத்தர்கள், தொலைபேசி இயக்குபவர், சுற்றுலாக் காவலர்கள், செவிலிய உதவியாளர்கள், தீயணைப்பாளர்கள், துப்பாக்கி ஏந்திய பாதுகாவலர்கள், காப்பாளர்கள் நிலையில் பணியமர்த்தக் கோரும் பணியிடங்களில் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தி

மறுவேலைவாய்ப்பு வழங்கும் "**மனித வள முகமையாக**" செயல்பட்டு வருகிறது.

31.03.2022 அன்றைய நிலவரப்படி, தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் மூலம், ஒன்றிய, மாநில அரசுத்துறைகள், ஏனையப் பொதுத்துறை நிறுவனங்கள், வாரியங்களில் 6,881 பாதுகாவலர்கள், 1048 ஓட்டுநர்கள், 90 எழுத்தர்கள், 11 தொலைபேசி இயக்குபவர்கள், 51 துப்பாக்கி ஏந்திய காவலர்கள், 23 அலுவலக உதவியாளர்கள், 8 செவிலிய உதவியாளர்களும், இந்து சமய அறநிலையத்துறை கோவில்களில் பொருத்தப்பட்டுள்ள CCTV கருவியினை கண்காணிப்பதற்காக 49 உதவி பாதுகாப்பு அலுவலர்கள் ஆகமொத்தம் 8,161 முன்னாள் படைவீரர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இதில் 2,683 முன்னாள் படைவீரர்கள் ஒன்றியப் புனரமைப்புத் தலைவர் ஊதிய விகிதத்திலும் (10% சேவை கட்டணம்), 5,478 முன்னாள் படைவீரர்கள் தமிழ்நாடு குறும ஊதிய விகிதத்திலும் (12% சேவை கட்டணம்),

பணியமர்த்தப்பட்டுள்ளனர். இது தற்சார்பு பெற்ற இலாபம் ஈட்டும் ஒரு நிறுவனமாகும்.

தமிழ்நாடு மின் உற்பத்தி, பகிர்மானக் கழகம், கோரியதன் அடிப்படையில் "மின் திருட்டு தடுக்கும் படை" அமைக்கப்பட்டு தனித்திறன் வாய்ந்த 215 முன்னாள் அவில்தார்கள், முன்னாள் இளநிலை படைப்பணி அலுவலர்கள் நிலையில் பணியமர்த்தப்பட்டு, ரூ.213.43 கோடி அளவிற்கு மின் திருட்டு தடுக்கப்பட்டுள்ளது.

அதே போன்று, தமிழ்நாடு சுற்றுலாத் துறை கோரியதற்கிணங்க "சுற்றுலா பாதுகாப்புப் படை" அமைக்கப்பட்டு 31 சிறப்புத் தகுதி பெற்ற முன்னாள் படைவீரர்கள் தமிழ்நாட்டிலுள்ள இராமேஸ்வரம், உதகமண்டலம், மாமல்லபுரம், கன்னியாகுமரி, கொடைக்கானல் ஆகிய ஐந்து முக்கியச் சுற்றுலா தளங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்திற்கு ரூ.19.19 கோடி செலவில் 760.16 சதுர மீட்டர் பரப்பளவில்

சென்னையில் நிலம் வாங்கப்பட்டு, 15,708.98 சதுர அடியில் புதிய அலுவலகக் கட்டடம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கட்டப்பட்டு வருகிறது.

### 9.1. இதர நலத்திட்டங்கள்

முன்னாள் படைவீரர்களின் நலன் கருதி தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் பின்வரும் நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது:–

- **"விபத்துக் காப்பீட்டுத் திட்டம்"** தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தில் பணியமர்த்தப்பட்ட அனைத்துப் பணியாளர்களுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டு, இறந்தவரின் வாரிசுதாரர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் ரூ.3 இலட்சம் வழங்கப்படுகிறது.
- **"தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழக நல நிதித் திட்டம்"** தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் முன்னாள் படைவீரர்களுக்காக ஆண்டுக்குத் தோராயமாக ரூ.2.76 கோடியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 10. மாநில மனித உரிமைகள் ஆணையம்

1993–ஆம் ஆண்டின் மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கில் தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையம், 1997–ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு, தற்போது, மாண்புமிகு தலைவர், மாண்புமிகு உறுப்பினர்கள் இருவரையும் கொண்டு செயல்பட்டுவருகிறது.

பொது மக்களிடம் ஏற்பட்டுள்ள விழிப்புணர்வு காரணமாக, இந்த ஆணையம் செயல்படத்துவங்கியது முதல் இவ்வாணையத்தில் பெறப்படும் புகார்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்த வண்ணம் உள்ளது. 1997–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் மார்ச் திங்கள் 2022 வரை இவ்வாணையத்திற்கு 2,39,132 புகார்கள் வரப்பெற்று, 2,04,711 புகார்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

2022–ஆம் ஆண்டு, தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் வெள்ளிவிழா ஆண்டாகும். இதனைச் சிறப்பிக்கும் வகையில், 22.10.2021 அன்று,

ஐக்கிய நாடுகள் தினமும், 29.10.2021 அன்று உலக மனவள தினமும் அனுசரிக்கப்பட்டது. மேலும், 10.12.2021 அன்று, சர்வதேச மனித உரிமைகள் தின விழா நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சிகளில், தமிழக அரசின் மாண்புமிகு அமைச்சர்கள், மாண்புமிகு நீதியரசர்கள், சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொண்டனர். மேலும், மனித உரிமைகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. மேலும், இவ்விழாவில் கல்லூரி மாணவர்களிடையே மனித உரிமைகள் குறித்த பேச்சுப்போட்டி, கருத்தரங்கம், கட்டுரைப்போட்டி, ஓவியப்போட்டி நடத்தப்பட்டுப் பரிசுகள், சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மேலும், சுகாதார உரிமையும், வாழும் உரிமையும் மனித உரிமைகள் என்பதால், கிண்டி, சென்னை, அரசு கொரோனா மருத்துவமனையின் மருத்துவர்கள், இதர பணியாளர்களின் முன்களப் பணியினைப் பாராட்டும் விதமாக 08.02.2022 அன்று விழா நடத்தப்பட்டது. இவை தவிர, காவல்துறை, சிறைத்துறை அதிகாரிகளுக்கு பயிற்சியும், சட்டம்,

உளவியல், குற்றவியல், மனித உரிமைகள் குறித்து, கல்லூரி மாணவர்களுக்கு நிலையப் பயிற்சியும் இவ்வாணையத்தில் வழங்கப்படுகிறது.

கோவிட்–19 பெருந்தொற்றின் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான தமிழக அரசின் நிலையான வழிகாட்டி நெறிமுறைகளைப் பின்பற்ற இயங்கலை (on-line) மூலமாக புகார் அளிக்கும் வசதியினை 07.12.2020 முதல் ஆணையம் ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலம் 31.03.2022 வரை 3461 புகார்கள் பெறப்பட்டுள்ளன. இவற்றில் 3239 புகார்கள் ஆணையத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. மீதமுள்ள 222 புகார்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. மேலும், காணொலி காட்சி மூலமாகவும் வழக்குகளை விசாரணை செய்யும் வசதியும் ஆணையத்தால் ஏற்படுத்தப்படவுள்ளது.

## 11. முடிவுரை

நேர்மையான நிருவாகத்திற்கும், தூய்மையான மக்கள் பணிக்கும், தீவிர கண்காணிப்பும், தொடர் நடவடிக்கையும் தேவை. பணியாற்றுகிற அலுவலர்கள் பளிங்கு போன்ற மனத்துடனும், கறைபடியாத கரத்துடனும் பணியாற்றுகிறபோதுதான், அரசு ஒதுக்கும் நிதி கடைசி வரிசை மக்களுக்கும் கச்சிதமாகச் சென்று சேரும். பொதுத் துறை, அலுவலர்களின் நடத்தையைக் கண்காணிக்கும் பணியையும் ஆற்றி வருகிறது. கமுக்கமான பல கோப்புகளைக் கையாளவும் எந்தத் தகவலும் கசியாமல் கண்காணிக்கும் பணியையும் இத்துறை ஏற்று செயல்படுகிறது.

தமிழகத்தின் மாண்பைக் கட்டிக் காக்கும் சிறப்பு இத்துறைக்கு அடையாளமாகத் திகழ்கிறது. பொதுத் துறையின் அலுவலர்கள் அர்ப்பணிப்போடு, கூப்பிட்டக் குரலுக்கு ஓடி வரும் ஆயத்த நிலையில் எப்போதும் இருப்பவர்கள். அளிக்கிற பொறுப்பைத் தட்டிக்

கழிக்காமல், ஆர்வமாகவும், துல்லியமாகவும் செயல்படும் பண்பு இத்துறைக்கான பதாகையாக இருக்கிறது. இத்துறை மனித உடலின் மூளையைப் போல இருப்பதால், அத்தனைத் துறைகளும் இயங்குவதற்குத் தேவையான ஒருங்கிணைப்பைச் செய்வதோடு, அவை அவ்வப்போது திறம்பட செயலாற்றத் தேவையான உதவிகளைச் செய்வதற்கும் முக்கிய பங்காற்றுகிறது. இத்துறை மாவட்ட நிருவாகத்தோடு தொடர்ந்து தொடர்பிலிருந்து மாநிலத்தின் காணும் விழிகளாகவும், கேட்கும் செவிகளாகவும், துடிக்கும் இதயமாகவும், திகழும் முக்கியமான துறையாகும். சீராக முந்திச் செயல்படும் அரசின் உயிரோட்டமான இயக்கத்திற்கு இது மூச்சாக உள்ளது.

**மு.க.ஸ்டாலின்**
**முதலமைச்சர்**

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை - 600 001.